2013 ஏப்ரல் 10]
203—

கண்மாய் தூர்வாருதல்

***8224—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, மேலஉரப்பனூர் பெரிய கண்மாயினைத் தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், உரப்பனூர் கிராமத்தின் அருகே மேலஉரப்பனூர் பெரிய கண்மாய் அமைந்துள்ளது. இந்தக் கண்மாயினைத் தூர்வார நடவடிக்கை எடுக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேள்வியை எழுப்பியுள்ளார். அதேபோல, கரைகளைப் பலப்படுத்த வேண்டுமென்றும் இங்கே கோரிக்கை வைத்துள்ளார். இந்தக் கண்மாயின் மொத்த ஆயக்கட்டுப் பரப்பு 572.84 ஏக்கர் ஆகும். இக்கண்மாய்க்குத் திருமங்கலம் நீட்டிப்புக் கால்வாய், ஊராண்ட உரப்பனூர் கண்மாய் மற்றும் ஜோசியர்–ஆலங்குளம் கண்மாயிலிருந்து நீர்வரத்து வருகின்றது. இக்கண்மாயில் மொத்தம் 3 மடைகள் உள்ளன. 2011–2012 ஆம் நிதியாண்டில் முதலாவது மடை புனரமைக்கப்பட்டுள்ளது. 2012–2013 ஆம் நிதியாண்டில் இரண்டாவது மடை புனரமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒரு மடையைப் புனரமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திட்டத்திற்காக மக்கள் அல்ல; மக்களுக்காகத் திட்டம்' என்று அறிவித்து, சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து

மக்களைத் தேடி ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நாளை டெல்லி கோட்டையிலிருந்து இந்தியாவை வழிநடத்துவார் என்ற நம்பிக்கையில் மக்கள் எல்லாம் அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்த நல்ல வேளையில், (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, பெரியஉரப்பனூர் கண்மாயில் மேடு சரிந்து, சாலையும், கண்மாயும் சமமான நிலையில் இருக்கின்ற காரணத்தினால், அருகில் இருக்கக்கூடிய திருமங்கலம் நகரத்தில் உள்ள கக்கன் காலனி, அண்ணா நகர் பகுதி மக்களுடைய குடியிருப்புப் பகுதிகளிலே தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு, அந்தப் பகுதி மக்கள் மழைக்காலம் வந்துவிட்டாலே பயப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

மேலஉரப்பனூர், கீழஉரப்பனூர் இரண்டு கண்மாய்களும் பெரிய அளவில் சமமான ஆயக்கட்டுகளைக் கொண்டுள்ளவை. பின்னக்குளம் என்ற பகுதியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், கண்மாய் மடைகள் சரிசெய்யப்பட்டிருக்கின்றன. அதற்காக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரு கண்மாய்களையும் தூர்வாரி, ஆழப்படுத்திக் கொடுத்தால், அருகில் இருக்கக்கூடிய விவசாயிகளுடைய நிலங்களில் நிலத்தடி நீர் உயரும். அதற்கான நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. திருமங்கலம் நகரத்தில் இருக்கக்கூடிய கால்வாயிலும் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடாத நிலை ஏற்படும். எனவே, அந்தக் கண்மாயைத் தூர்வாரியும், திருமங்கலம் நகரத்தினுடைய கால்வாயில் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடாமலும், அங்குள்ள மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையிலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நினைத்ததை நடத்தியே முடிப்பவன் நான், நான்' என்கின்ற புரட்சித் தலைவரின் பாடல் வரிகளின்படி, செயல்படுகின்ற வள்ளலின் வாரிசு மாண்புமிகு அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைத்ததை முடிக்க உத்தரவிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

2013 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கண்மாயைத் தூர்வாருவதற்கும், திருமங்கலம் நகரக் கால்வாயைச் சீரமைப்பதற்கும் உத்தரவிட்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைக் கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

204—

கட்டட வசதி

***7334—திரு. கோ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, காமநாயக்கன்பட்டி கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் மேற்கு தொகுதியிலே உள்ள காமநாயக்கன்பட்டி கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டித் தரப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கான இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்ட இடம் கரடு புறம்போக்கு என்பதால், அதில் கட்ட முடியாது. எனவே, புதிய இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருவதால், இடம் தேர்வு செய்யப்பட்ட பின்பு, அங்கே கட்டடம் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.